**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 366/2025**

**Prosecution witness : அ.சா. 11** **Date : 12.02.2026.**

| | |
|---|---|
| **Name : பாரதியார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.02.2025 ம் தேதி காலை 10.35 மணிக்கு சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக குற்றஎண். 45/2025 சாலை விபத்து சம்மந்தமாக காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் சின்னதாயி க/பெ.கணேசன் என்பவருடைய பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்து இறப்பின் உண்மைத்தன்மையை அறியவேண்டி, சடலக்கூறாய்வு செய்தற்கு முன்பு மருத்துவர் முன்பு அடையாளம் காட்ட பணித்தார்.

2) நான் அன்றைய தினம் பகல் 11.00 மணிக்கு மருத்துவர் காஞ்சனா அவர்களிடம் சடலத்தை அடையாளம் காட்டி ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் உறவினர் ராஜூ வசம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) 12/02/2025ம் தேதி இறந்தவரின் உடல் ஒப்படைக்கப்பட்டது என்றால் ஆமாம். இறந்தவர் எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் சாலை விபத்து காரணமாக இறந்து போய்விட்டார். பிரேதத்தை ஒப்படைத்தது தவிர வேறு எந்த வேலையும் செய்யவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.13 12:19:29 +0530

Judicial Magistrate No.II,
Mettur.